3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) திருப்பூர் சாயப்பட்டறை கழிவுநீர், நொய்யல் ஒரத்துப்பாளையத்தில் கலப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு—தொடர்ச்சி

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு பிரச்சினையை, அதிலும் இன்றைக்கு உண்ணாவிரதம் இருக்கிற பிரச்சினை குறித்து உறுப்பினர் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்காத காரணத்தால் அதற்கு நாங்கள் அதிருப்தி தெரிவிக்கும் வகையில்—ஏனென்றால் அது எங்கள் உரிமை—எங்களுடைய வெளிநடப்பை நாங்கள் செய்து காட்டுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ.சி. மணி அவர்களையும் அழைத்துக்கொண்டு போகிறீர்களா? (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

முற்பகல் 11-20

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு-தொடர்ச்சி

திரு. ஜி.கே. மணி: பேசுவதற்கு அனுமதிக்கவில்லையென்று சொன்னால், இதைக் கண்டித்து பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் வெளிநடப்புச் செய்கிறோம்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

திரு. எச். ராஜா: **

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் பேசியது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.